வரு.72 இல. 48 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2020 நவம்பர் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை | November 29 Sunday, 2020

32பக்கங்கள் 40/-





அதிகரிக்கும் யானை – மனிதன் முரண்பாடு 03



நினைவு கூருவதற்கான உரிமையை தடுக்க முடியாது 05



காற்பந்தின் கடவுள் மரடோனா 11

நாயகியானார் 'குட்டி நயன்தாரா' அனிகா 17

## மாவீரர் தின நினைவேந்தல் விவகாரம் தொடர்பாக

# சுமந்திரனும் சரத்வீரசேகரவும் சபையில் கடும் வாக்குவாதம்







JVPக்கு ஒரு நியாயம் தமிழருக்கு வேறொரு நீதியா ?

ஷம்ஸ் பாஹிம்.சுப்ரமணியம் நிசாந்தன்

மாவீரர் தின நினைவேந்தல் விவகாரம் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் 04

ஜே.வி.பியையும் புலிகளையும் ஒன்றாக ஒப்பிட முடியாது ?



இலங்கை, இந்திய மற்றும் மாலைதீவுக்கிடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான 4ஆவது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்ட முத்தரப்பு கூட்டம் இலங்கையின் தலைமைப் பொறுப்பில் நேற்று (28) கொழும்பிலுள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. இது இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜீத் டோவால், மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் மரியா திதி மற்றும் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படம். படம்: ஸாதிக் ஷிஹான்



## இலங்கை - பலஸ்தீன உறவு மிகச் சிறப்பானது

சர்வதேச பலஸ்தீன ஒருமைப்பாட்டு தின செய்தியில் பிரதமர் மஹிந்த 04

### நோயின் நிலை, கள முன்னேற்றம் என்பன ஆராயப்பட்ட பின்னர்

## தனிமைப்படுத்தல் பிரதேசங்களின் நிலை குறித்து மீளாய்வு இன்று அல்லது நாளை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கான ஜனாதிபதி செயலணி கூடியே தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் மீளாய்வு செய்து வருகிறது. அதனால் தினந்தோறும் மரணமடையும் ஒவ்வொருவர்தொடர்பிலும்ஜனாதிபதிமட்டுமின்றி துறைசார்ந்த அனைவருமே கவனம் செலுத்தி வருகின்றனர். இது தொடர்பான மீளாய்வின் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானிப்போம்.இதுவரை நாம் மேற்கொண்டுள்ள மீளாய்வுக்கிணங்க அடுத்த வாரத்தில் நாம் எந்தப் பிரதேசங்களை திறக்க வேண்டும்? எந்த பிரதேசங்களை தனிமைப்படுத்தலுக்காக 04

## PCR பரிசோதனைக்கு ஒத்துழைக்காத நபர்களின் வீடுகளுக்கு 'சீல்' வைப்பு

### தவிர்க்குமாறு கோருவோர் மீது சட்ட நடவடிக்கை – அஜித் ரோஹண



லோரன்ஸ் செல்வநாயகம்

பி.சி.ஆர் பரிசோதனையைத் தவிர்ப்பவர்களின் வீடுகள் சீல் வைக்க நட வடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

## மேல் மாகாணத்திலிருந்து வெளியே செல்வதை முடிந்தளவு தவிர்க்கவும்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஹேரத் கோரிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

அத்தியாவசியமான காரணங்கள் தவிர மேல் மாகாணத்திலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு செல்லுதல் மற்றும் மேல் மாகாணத்திற்குள் உட் பிரவேசித்தலைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அது தொடர்பில் மக்கள் தமது பொறுப்பை சரியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இனங் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் மூலத்தை தேடிப் பார்க்கும் போது அது 04




### கொரோனா வைரஸ் அச்சுறுத்த

## O/L பரீட்சை ஒ
## தவிர்க்க



### பாராளுமன்றத்தில் கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

ஷம்ஸ் பாஹிம், நிசாந்தன் சுப்பிரமணியம்

கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் தொடர்ந்தால் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஒத்திவைப்பதை தவிர்க்க முடியாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். 2021 ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் 27 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டபடி பரீட்சை நடத்தப்படுமா என்பது குறித்த முடிவு ஒரு வாரத்திற்குள் எட்டப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

எதிர்வரும் இரண்டு வாரக்காலப்பகுதிக்குள் பாடசாலைகளை திறக்க முடியாது போனால் 04

### துக்குடியிருப்பில்

## த்திரகாளி
## ருவுருவம்

### தரிசனம்



கல்குடா தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பத்திரகாளி ... னின் திருவுருவம் தெரிவதால் நேற்று முதல் பக்தர்கள் படையெடுத்து வர தொடங்கியுள்ளனர்.

குறித்த ஆலயத்திலுள்ள

## வன்னி காணி பிரச்சினை உடனடி தீர்வு அவசியம்

### மஸ்தான் எம்.பி சபையில் வலியுறுத்து



ஷம்ஸ் பாஹிம், சுப்ரமணியம் நிசாந்தன்

வன்னி மாவட்டத்தில் நீண்ட காலமாக ஏற்பட்டிருக்கின்ற காணி சம்பத்தமான பிணக்குகளை உடனடியாக மக்களின் நலன்கருதி மிக அவசரமாக தீர்த்து தருமாறு காணி தொடர்பான அமைச்சர் மற்றும் இராஜாங்க 04

## நாளை முதல் CTB பஸ் சேவை வழமைக்கு



நாளை முதல் பஸ்கள் வழமைபோல இயங்கும் என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும்

## நோர்வூட்டில் தொழிலாளர்களின்

